டில் மட்டும் 20-க்கும் அதிகமான படங்கள் இது போல் வந்திருக்கி றது.

பாலாஜி சக்திவேல் இயக்கி வரும் ஒரு படத்தில் கூட ஸ்டில் கேமிராவைப் பயன்படுத்துகிறார் களாம். சமீபத்தில் வந்து வெற் றிக்கரமாக ஓடி வரும் ‘மௌன குரு’ படமும் ஸ்டில் கேமிரா வில் எடுக்கப்பட்டதுதான். இது போன்று நாளுக்கு நாள் சினிமா வின் வளர்ச்சி வேறு கோணத்தில் வளர்ந்து வரும் போது, பெப்ஸி அமைப்பினர் 70 சதவீதம் சம்ப ளம் உயர்த்தி கேட்பது தயாரிப்பா ளர்களுக்கு அதிர்ச்சியாக இருக்கி றது. இது போன்ற ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் படங்கள் எடுக்க யாரும் முன் வர மாட்டார்கள். இந்தப் பிரச்னையில் அரசு தலை யீட்டால்தான் தீர்வு ஏற்படும்'' எனக் கோபத்தில் தொடங்கி சாந்தமாக முடிக்கிறார் தயாரிப்பாளர் சங்கத் துணை செயலாளர் ‘அம்மா கிரியேஷன்ஸ்‘ சிவா.



தயாரிப்பாளர் சிவா

``கடந்த ஒரு வருடமாகச் சம்பள உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம். மொத்தம் 24 அமைப்புகளைக் கொண்டது பெப்ஸி. 9 அமைப் புகள் தினக்கூலி பெறுபவை. அவற்றின் டான்ஸ், ஃபைட், டிரைவர், சமையல், ஜூனியர் ஆர்ட் டிஸ்ட் போன்றவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி எஸ்.ஏ.சந்திரசேகரன் கையெழுத்து போட்டு விட் டார். மற்ற அமைப்புகளுக்கு இன்னும் கையெழுத் தாகவில்லை. நிறைய படப்பிடிப்புகள் அவுட்டோ ரில்தான் இப்போது நடக்கிறது. சென்னை ஸ்டுடி யோக்களில் பாடல் காட்சிகள் மட்டுமே படமாகின் றன. நிறைய தயாரிப்பாளர்கள் நாங்கள் கேட்ட சம் பளத்தை உயர்த்தித் தருகிறார்கள்.

ஒரு சிலரால் மட்டுமேதான் குழப்பம். 24 சங்கங் களில் ஒரு சங்கத்தை ஒதுக்கினால் கூட ஒத்துழைப் புத் தர மாட்டோம். தமிழ் சினிமா படப்பிடிப்புக ளுக்கு அழைப்பு வந்த இந்த நேரத்தில் யாரும் வரக் கூடாது என வெளி மாநில தொழிலாளர் அமைப் புகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். நாங்கள் யாருடனும் மோதவில்லை. ஒருங்கிணைந்த தொழி லாளர்களின் வாழ்வைக் கருத்தில் கொண்டுதான் பேசி வருகிறோம். வழக்கமாக கொடுக்க வேண் டிய சம்பளத்தைதான் கேட்கிறோம். இது குறித்த எங்கள் கருத்தை முதல்வரிடம் எடுத்து வைக்கத் தயாராக இருக் கிறோம்'' என உணர்ச்சி வசப்பட் டார் பெப்ஸி செயலாளர் ‘பெப்ஸி’ சிவா.

``வீட்டு வாடகை, பள்ளிக் கட் டணம், பெட்ரோல் விலை, அத் தியாவசிய பொருள்களின் விலை உயர்வு என அனைத்தும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகி றது. ஆனால் அதற்கான சம்பள உயர்வு எங்களுக்கு இல்லை. இது குறித்த அக்கறை கூட யாருக்கும் இல்லை. எம்.ஜி.ஆர்., சிவாஜி காலங்களில் எல்லாம் தொழிலா ளர்களின் சம்பள பிரச்னையில் அவர்களே தலையீட்டு தீர்வு காண் பார்கள். அப்படி ஒரு நடிகர் இப்போது இல்லை என் பதுதான் என் வருத்தம். கடந்த ஒரு வருடமாக சம் பள உயர்வு கேட்டுப் போராடி வருகிறோம். நாங் கள் கேட்டவற்றை பரிசீலனை செய்ய கூட யாரும் இல்லை. இந்த பிரச்னைக்காக யாராவது ஒரு நடி கராவது குரல் கொடுத்தார்களா? ஆனால் அவர் களின் வளர்ச்சிக்கு மட்டும் நாங்கள் வேண்டும். ஒரு நடிகைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் கூட எங்களுக்கு இல்லை. சாதாரணமாக கடந்து போகும் மரம், செடி, கொடிகளைப் போன்றாவது எங்களைப் பார்க்க வேண்டும்'' என வேதனையு டன் பேசுகிறார் டெக்னீயசியன் சங்க நிர்வாகி தன பால்.

தயாரிப்பாளர் சங்கம், பெப்ஸி இரண்டு தரப்பி லும் இனி பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை. அப் படி பேச்சுவார்த்தை எழுந்தாலும் மோதல்கள்தான் வெடிக்கும். இதில் அரசு தலையீடுவதுதான் நல் லது. அதற்கான செயல்பாடுகளில் சில நடிகர்கள் ஈடுபட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

பிரச்னையை பெரிதாக உருவாக்கி வரும் பெப்ஸி அமைப்பை உடைப்பதற்கு, தயாரிப்பாளர் சங்க நிர் வாகிகளும், சினிமாவுக்கு முதலீடு தரும் பைனான் சியர்களும் களம் இறங்கியிருப்பதாகவும், அதை எல்லாம் உடைத்தெறியவும் நிலைமையைச் சரி செய்யும் விதத்திலும் பெப்ஸி தொழிலாளர்கள் ஒற் றுமையுடன் இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இனி என்ன நடக்கும்... இறுதிக் காட்சிப் சினிமா படம் போலத்தான் இருக்கிறது இந்தப் பிரச்னை.

**இயக்குநர் சங்கத்துக்கு வழங்கப்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தம், 3 ஆண்டுகள் முடிந்து காலாவதி ஆகிவிட்டதால், இயக்குநர் சங்கமே தங்களது ஊதியத்தை அறிவித்துள்ளது, பெப்ஸி பிரச்னையில் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இயக்குநர்களின் நலன் கருதி புதிய சம்பள உயர்வை அறிவித்துள்ளதாக இயக்குநர் சங்கப் பொதுச் செயலாளர் அமீர் தெரிவித்துள்ளார். இயக்குநர் சங்கத்தின் இந்த திடீர் அறிவிப்பால், தயாரிப்பாளர் சங்கத் தரப்பு இன்னும் நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிகிறது. இதையடுத்து, பெப்ஸி சம்பள பிரச்னை விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியிருக்கிறது.**